**சுருக்கம்**

பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – தருமபுரி மாவட்டம், செல்லியம்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தில் நவீன சமையலறை கட்டுவதற்கு ரூ.24.48 இலட்சம் நிதி ஒப்பளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 30** **நாள்: 24.08.2017**
**ஹேவிளம்பி – ஆவணி, 9**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க. எண் 871/மஇக(1)/2014, நாள் 25.09.2015 மற்றும் 15.02.2017.

--------

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் மேல்பாக்கம் அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஆகியவற்றில் 6 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் மேல்பாக்கம் அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஆகியவற்றில் நவீன சமையலறை கட்டப்பட்டுள்ளது எனவும், எஞ்சிய 4 அரசு மறுவாழ்வு இல்லங்களில் செல்லியம்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தின் சமையலறை மிகவும் பழுதடைந்துள்ளதால், நவீன சமையல் அறை கட்டுவதற்கு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) சென்னை மண்டலம் பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்ட திட்ட மதிப்பீட்டின்படி, 2016–2017ஆம் ஆண்டுக்கு தேவைப்படும் ரூ.22.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி ஆணை வழங்குமாறும் கோரியுள்ளார்.

2. மேற்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. தற்போது 2017–2018ஆம் நிதி ஆண்டு நடைபெறுவதால், தருமபுரி மாவட்டம், செல்லியம்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தில் நவீன சமையலறை கட்டுவதற்கு 2016–2017ஆம் ஆண்டின் திட்டமதிப்பீட்டு தொகையான ரூ.22.25 இலட்சத்திற்கு 10% உயர்வுடன் ரூ.24.48 இலட்சம் (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) நிருவாக ஒப்புதலும் மற்றும் நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே, பத்தி–2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“4235–சமூகப் பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு–02 – சமூக நலன்–101 – ஊனமுற்றோர் நலன் – மாநிலச் செலவினங்கள் – JU கட்டடங்கள்–16 பெரும்பணிகள்”

[த.தொ.கு. 4235 02 101 JU 1601]

4. மேலே, பத்தி–2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புதுப்பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்ட பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம்

[த.பி.பா.]

மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு, பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதித் (வரவு–செலவு, பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் / தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப் பணித்துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017–2018ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (சந/வ.செ.பொ.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் / தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), பொதுப் பணித்துறை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா எண் 42613/நிதி(ச.ந)/2017, நாள் 17.08.2017–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 1248 (ஆயிரத்து இருநூற்று நாற்பத்து எட்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் (மு.கூ.பொ.),
சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்)
பொதுப் பணித்துறை, சென்னை–5.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
நிர்வாக அலுவலர், அரசு மறுவாழ்வு இல்லம்,
செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர் (A&E), சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (மீன் வளம், நிதி, மற்றும் பணியாளர் (ம)
நிருவாகச் சீர்திருத்தம்) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந./வ.செ.பொது–I) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்